1971 டிசம்பர் 11]

மாவட்ட மகளிர் நல அலுவலர்கள்

* 263 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட மகளிர் நல அதிகாரிகளின் கடமைகளும், பொறுப்புகளும் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவைமுன் ஒரு விபர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

தெற்குப் பரும்பூர் அரிசனங்களுக்கு வீட்டு மனை

* 264 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த தெற்குப் பரும்பூர் அரிசன மக்கள் வீட்டு மனை நிலப்பட்டாக் கோரி ஏழு ஆண்டுகள் ஆகியும் இன்னும் கொடுக்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், எப்போது பட்டா கொடுக்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) தெற்கு பரும்பூர் அரிசன மக்களுக்கு வீட்டு மனை வாங்குவதற்காக அந்த ஊரிலுள்ள, ச. எண். 535/10 நிலத்தில் 2.80 ஏக்கர் ஆர்ஜிதம் செய்வதற்கு. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் 4(1) பிரிவு அறிக்கை 9—12—1970 தேதியிட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டது. நிலச் சொந்தக்காரர்களை 5-ஏ விசாரணையில் விசாரித்து மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவு அறிக்கையை மாவட்ட ஆட்சியாளர் வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பியுள்ளார். வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை அரசுக்கு கிடைக்கப்பெற்றபின், 6-ம் பிரிவு அறிக்கை வெளியிடப்படும். பட்டா வழங்குவதற்கான அடுத்த நடவடிக்கைகள் ஆட்சியாளர் பிறகு எடுப்பார்.

0—30 a.m.

Exemption from sales tax on toddy

* 265 Q.—THIRU R. R. MUNUSAMI, DR. H. V HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:

(a) whether toddy sales have been exempted from the payment of sales tax; and

(b) if so, the reasons thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM: (a) Yes.

(b) Since this is the first year of suspension of Prohibition, the practical aspects in respect of sales of toddy are being studied. A decision on whether sales of toddy should continue to be exempt from sales tax will be taken in due course after watching the position.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில் மதுவிலக்கை நாங்கள் ரத்து செய்தது, மதுவிலக்குக்கு நாங்கள் எதிரானவர்களானதால் அல்ல; நிர்ப்பந்தத்தினால் தான் ரத்து செய்திருக்

(@170-171-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)